# முத்துக் குளிக்க வருகிறீர்களா!
# (கடல் - தமிழ்த் திருமறை திருக்குறள்)

**கோ. கணேசன்**

**முகவுரை: "பாருக்குள்ளே நல்ல நாடு – எங்கள் பாரத நாடு"** என்று உரைத்த பாரதி **"ஞானத்திலே பர மோனத்திலே – உயர் மானத்திலே உயர்ந்த நாடு"** என்று உறுதிப்படுத்தியதுடன் **"வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட** தமிழ்நாடு" என்று தாய்த்தமிழ் நாட்டின் தனிப்பெரும் பெருமையைப் பறைசாற்றுகிறார்.

அனைத்துலகும் போற்றும் செம்மை நெறிமுறையான தமிழ்த்திருமறையை யாத்த **தங்கத்தமிழ் புலவர் திருவள்ளுவர்.** தற்காலத் தமிழகத்தின் தலைநகரமான சென்னையில் 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே வாழ்ந்தவர் என்று வரலாறு கூறுகிறது. அவரது மனைவியின் பெயர் வாசுகி அம்மையார்.

அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அன்றாட நல்வாழ்க்கை நெறிமுறை அனைத்தையும் தனக்கென அமைத்துக் கொண்ட தனிப்பாணியில் கடலெனப் பொருள் நிறைந்து சுருக்கமான இரண்டிரண்டு வரிகள் கொண்ட குறளாக திருவள்ளுவர் படைத்திருப்பது பெரும் வியப்பை அளிக்கிறது. ஒவ்வொரு பாடலிலும் உள்ள பரந்த கருத்துக்கள் பிரமிப்பைக் கொடுக்கிறது.

**"கடுகைத் துளைத் தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்"**

என்று இடைக்காடர் என்ற புலவர் வியந்து புகழ்கிறார்.

தனிமையாக தியானத்தில் அமர்ந்துள்ளது போன்ற திருவள்ளுவரின் படங்களைத்தான் நாம் பார்க்கிறோம். அதே சமயத்தில் அவருடைய படைப்பான திருக்குறளைப் படிக்கும்பொழுது – அனைத்து இன்ப – துன்ப – தொல்லைகளை அனுபவபூர்வமாகக் கண்டவர் போலவும் - அரசனாக – ஆண்டியாக – நல்லறிஞனாக - கூர்மதி அமைச்சனாக சிறந்த வீரனாக – மிகச் சாதாரண மனிதனாக பாமர ஏழையாக – பெரிய தனவந்தனாக தொழிலாளியாக – தொழில் முனைவராக – குழந்தையாக - இளைஞராக – முதியவராக – துறவியாக – கணவனாக – மனைவியாக – ஆணாக – பெண்ணாக அனைத்து நிலை வாழ்க்கையையும் ஆண்டு அனுபவித்து – நல்லது கெட்டதை உணர்ந்து தேர்ந்தவர் போல் வள்ளுவர் அளித்த திருக்குறள் போல் வேறு யாரும் படைக்கவில்லை என்பதைக் காண்கிறோம்.

இதனால்தான் அனைத்துலக மாந்தருக்கும் - எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய – ஒட்டுமொத்தமாக அனைத்து இயல்பு வாழ்க்கை நெறிமுறைகளையும் - எளிமையாக சுருக்கமாக எல்லோரும் புரிந்து செயல்படக் கூடிய முறையில் திருக்குறள் போன்ற இயல்பு வாழ்க்கை நெறிமுறையைக் கூறும் நூலை உலகத்தில் எங்கும் காணமுடியாது. வள்ளுவர் அளித்த திருக்குறள் போல் வேறு யாரும் படைக்கவில்லை என்பதைக் காண்கிறோம்.

அதனால்தான் திருக்குறளை அனைத்துலக மனித இனத்தின் **"இயல்பு வாழ்க்கை நெறிமுறை மறை"** என்றும், திருவள்ளுவரை **"ஒட்டுமொத்த மானிட நல்வாழ்வின் மாபெரும் நம்பிக்கை நட்சத்திரம்"** என்றும் போற்றுகிறோம்.

**முழுகி முத்தெடுப்போமா!:** கடலைப் போன்ற ஆழ்ந்த விசாலமான விரிந்து பரந்த கருத்துகள் பொதிந்த திருக்குறளில் மூழ்கினால்தான் முத்துக்களை அள்ளி வரலாம்.

நம்புங்கள்! அத்தனையும் நல்முத்துக்கள்! ஒன்றுகூட சோடை போகாது.

**"அணுவைத்துளைத் தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்தக் குறள்"**

என்ற குறளை ஔவைப்பாட்டி வாயாரப் புகழ்ந்துள்ளார்.

திருக்குறளை வள்ளுவர் ஈரடி வெண்பாவாகப் படைத்துள்ளார்.

ஒவ்வொரு இரண்டு வரியும் ஒரு குறளாக அமைந்துள்ளது.

மொத்தம் 1330 குறட்பாக்கள் திருக்குறளில் உள்ளன.

திருவள்ளுவர் அன்றாட அனைத்து நிலை மானிட இயல்பான வாழ்க்கையை ஆழ்ந்து சிந்தித்து அறம் - பொருள் - இன்பம் என்றவாறு வகைப்படுத்தி சீரான – சிறப்பான – செம்மையான நெறிமுறைகளை - இதைச் செய்திடு – அதைத் தவிர்த்திடு என்று கூறி எளிமையாகப் புரியும்படி திருக்குறளைப் படைத்துள்ளார்.

திருக்குறளை எந்த மொழி – நாடு – சமய – மத - இனத்தைச் சார்ந்த கருத்துக்களை மட்டும் ஒலிக்கும் நூல் என்று குறுகிய வட்டத்தில் காண முடியாமல்

**“அனைத்துலக நெறிமுறை மறையாகத்”** திகழ்கிறது என்பதே திருக்குறளின் தனிப் பெருமையாகும்.

திருக்குறளில் அறத்துப்பாலில் 380 குறளையும் பொருட்பாலில் 700 குறளையும் இன்பத்துப் பாலில் 250 குறளையும் வள்ளுவர் வழங்கியுள்ளார்.

அனைத்து குறட்பாக்களும் அருமையான கருத்துச் செல்வங்களாகும். அத்தனையும் முத்தான மிகவும் சத்தான பாடல்களாகும்.

**அதில் வருங்கால வளர்ச்சியின் நம்பிக்கை நட்சத்திரங்களாகச் ஜொலிக்கும் இளைய சமுதாயத்திற்கு வள்ளுவர் அளித்த முத்திரையான நல்முத்துக்களில் ஒரு சிலவற்றை மட்டும் முழுகி எடுத்து வந்து பெருமகிழ்ச்சியும் பயனையும் பெற முயல்வோமா!**

**மானிட வாழ்க்கை மகத்தான இன்னிசைக் கருவி:** அரிது – அரிது மானிடராய் பிறப்பது அரிது என்று கூறப்படுகிறது. “வானுலகத் தேவரும் அகிலத்து மானிடராய் பிறந்துதான் ஆண்டவனிடம் ஐக்கியமாகமுடியும். எனவே மனிதப்பிறவியே மகத்தானது என்பார் விவேகானந்தா அடிகள்”.

“பகவான் கண்ணன் அருளிய கீதையில் பல்லாயிரக்கணக்கான பிறவிகள் எடுத்தபிறகு ஒரு சில ஆன்மாக்களுக்கு மட்டும் மனிதப்பிறவி எடுக்கும் வாய்ப்பு கிட்டுகிறது. அதிலும் பலகோடியில் ஒருவர்தான் முழுமையான மனிதனாக மதிப்புடன் உயர்வுடன் வாழ்ந்து என்னில் சேர்ந்து தெய்வமாக ஆகிறார் என்று கூறுகிறார்”.

மனித வாழ்க்கையை நரம்புடைய இசைக்கருவிக்கு (Violin) ஒப்பிட்டு ஆன்றோர்கள் கூறியுள்ளனர்.

புத்தர் பெருமான் வீதியில் அமைதியாக நலன் பயக்கும் நடைப்பயணமாகச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு சிறு பெண் அவளது வீட்டின் மாடியின் உப்பரிகையில் (Balcony) தனது வயலினிற்கு சுருதி சேர்ப்பதில் மிகவும் சிரமத்துடன் முயன்று கொண்டிருப்பதைப் பார்த்தார். அவள் படும் மிகுந்த சிரமத்தைப் பார்த்துக் கருணைக்கடல் புத்தர் மனமிறங்கி உதவிடச் சென்றார். அந்த இசைக்கருவியில் ஒருசில நரம்புகள் வலிமையாக இழுத்தும் ஒரு சில வலிமையில்லாமல் இழுத்தும் - கட்டப்பட்டுள்ளதை உணர்ந்தார். அவைகளைச் சீரான – சரியான - இழுப்புடன் கட்டி உதவினார். பிறகு அந்த இசைக்கருவி சுருதி சுத்தமாக அற்புதமாக இசை எழுப்பியதால் - அந்த சிறிய பெண் மனமகிழ்ந்து – நன்றி தெரிவித்தாள். புத்தர்பகவான் கூறினார் – ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் இந்த நரம்புடன் இயங்கும் இசைக்கருவி போன்றதாகும். அதன் நிலையை சமச்சீராக நேர்த்தியாக அமைத்து இயக்கினால் - வாழ்க்கை செம்மையாக இருக்கும். நல்வாழ்க்கை நெறிமுறைக்கு வள்ளுவர் கூறாததை யாரும் கூறவில்லை. அதே நேரத்தில் அவர்கள் கூறிய அற்புதமான கருத்துக்கள் வள்ளுவர் வாக்கினிற்கு மேலும் மெருகூட்டுகின்றதைப் பார்க்கிறோம்.

**“தானே முழுதுணர்ந்து தண்தமிழின் வெண் குறளால்**
**ஆனா அறமுதலா அந்நான்கும் - ஏனோருக்(கு)**
**ஊழி னுறைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்**
**வாழியுல கொன்னாற்று மற்று.”**

என்று நக்கீரர் திருக்குறளைப் புகழ்ந்துள்ளார்.

“மனிதனரில் பெரும்பகுதியினர் “இல்லறம் ஏற்று” சம்சாரியாக வாழ்வதுதான் உலக நியதி. எனவே ஊரோடு ஒட்டி வாழ் - அதே சமயம் இயற்கையுடன் மோதிப் போர் செய்து வெற்றி காண் - என்று விவேகானந்தர் முழங்குகிறார்”. (Co-exist with creation but confront the nature)

மனிதவாழ்வில் இயற்கையுடன் அனைத்து காலகட்டத்திலும் கடுமையாகப் போர்தொடுத்து வெற்றி கண்டு முன்னேறுவது அவசியம் என்பதை உணர்த்தி – அதற்கான அற்புதமான வாழ்க்கை முறைகளையும் திருக்குறள் நமக்கு சிறப்பாக எடுத்துரைக்கிறது.

**இறையுணர்வுடன் தொடங்குதல்:** நன்றி உணர்வே நமது கலாச்சாரத்தின் ஆணிவேர்! இறையுணர்வு என்றால் என்ன? மானிடராய்ப் பிறந்து – வாய்ப்புகளைப் பெற்று – வெற்றிகளை அடைய நமக்கு அருளிய இறைவனுக்கு செலுத்தும் நன்றிதானே!

இறைவணக்கம் என்பதை வள்ளுவர் மிகவும் கவனத்துடன் கடவுளை நம்புபவர்களும் - கடவுளை நம்பாதவர்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் தொகுத்திருப்பது பிரமாதம்.

“அகர முதல எழுத்தெல்லாம்” என்று சொல்லி

ஆதிபகவன் முதற்றே உலகு என்று அன்னையும் பிதாவும் தெய்வம் என்கிறார்.

“தனக்குவமை இல்லாதான்” என்று – எதையும் இதற்கு சமமென்று கருதமுடியாததால், தலை தாழ்த்தி வணங்குவதுதான் சரி என்கிறார்.

“பிறவிக் பெருங்கடல்நீந்துவார்” என்று – அறநெறியுடன் சிறப்பாக வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாதவர் முக்தி அடையமாட்டார் என்கிறார்.

ஆத்திகரும் - நாத்திகரும் அவரது சிந்தனை ஓட்டத்தில் அர்த்தம் காணும் வகையில் இறைவணக்கத்தினை வள்ளுவர் அமைத்திருப்பது அற்புதமாக காணப்படுகிறதல்லவா!

**இல்லறத்தின் பெருமை:** அன்பு – அமைதி – அறம் - கடமையுடன் கர்மங்கள் ஆற்றி இல்வாழ்க்கையில் மகிழ்வுடன் இருப்பவர்களை தெய்வமும் தேடிவந்து மதித்து – மரியாதையுடன் வணங்கும் என்பதுதானே மனிதப்பிறப்பின் மாட்சிமை தரும் குணநிலையாகும். இதைத்தானே கீதையில் கடவுள் கண்ணன் வலியுறுத்துகிறார்.

இதை பாரதியார் அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறார் – “கீதை உபதேசமே இயல்பான இல்லற வாழ்வில் ஈடுபட்டவருக்குத்தான். ஏனெனில் கீதையைக் கேட்ட அர்ச்சுனனும் சன்னியாசியல்ல! கீதையை உபதேசித்தக் கண்ணனும் சன்னியாசியல்ல என்று விளக்குவார்”.

வள்ளுவர் இல்லறத்தின் மாண்பைச் சிறப்புடன் விளக்கிட இல்லறத்தாரே மற்ற அறங்களைத் தழுவி வாழ்ந்திட உதவுபவர்கள் என்று கூறியுள்ளார். அதுமட்டுமல்ல வானுறையும் தெய்வங்களுக்கு இணையாக செம்மையான – அறம் வழுவி இல்வாழ்வான போற்றப்படுவான் என்பதை பொய்யாமொழியார் வள்ளுவப் பெருந்தகை உறுதியுடன் உரைத்துள்ளார். மனிதக் கடமைகளைத் தொடர்ந்து செய்! – உனக்காக சுயதர்மக் கடமைகளைத் தவறாமல் செய்!

**“இல்லறம் அல்லாத நல்லறம் உண்டா”**

என்று நம் இளைய சமுதாயத்தினரை மகிழ்ச்சியுடன் ஊக்குவித்து, இல்லறத்தை ஏற்று செம்மையாக சிறப்பித்திட வள்ளுவர் வாய்மை மொழியைவிட எது சிறந்ததாகும்.

**பெற்றோர் மகிழ்வும் - கடமையும்:** மணமக்களை வாழ்த்தும்பொழுது “பதினாறும் பெற்று பெருவாழ்வு பெறு” என்றும் “புத்திரபாக்கியத்துடன் வாழ்” என்றும் பெரியவர்களின் ஆசியுடன் தொடங்குகிறோம். திருமணமானவுடன் திருமணஞ்சேரிக்கும், திருக்கருகாவூருக்கும் சென்று அம்மன் அருளைப் பெறு – செம்மையான மக்கட் பேற்றை அவள் அருளுவாள் என்று பெரியவர்கள் ஆசி கூறுகிறார்களல்லவா? எனவே மனிதன் பெறும் அனைத்துப் பேறுகளிலும் “மக்கட் பேறே” முதன்மையானதாகும்.

அதே நேரத்தில் அதில் ஆபத்தும் உள்ளது. அதை விளக்கத்தான் ஏழு பிறவியிலும் தீயவைகளைத் தீண்டாத – பண்பான மக்களைப் பெறுதலின் மாண்பினை வள்ளுவர் விளக்குகிறார்.

மக்கள் ஒலிக்கும் குரல் (மழலை) சிறப்பான குழலைப் போன்ற இன்னிசைக் கருவிகள் எழுப்பும் ஒலிகளைவிடத் தேதெனன இனிக்கும் - பெற்ற அன்னைக்கு என்று கூறி வள்ளுவர் தானே தாயாக இருந்து அனுபவிக்கிறார். அறிவுரைகளை அள்ளி வழங்கியுள்ள வள்ளுவர் பெருமானை தாயாகவும் தந்தையாகவும் நாம் எண்ணி – ஏற்று இனிதுடன் மகிழ்வதால் அவரையே இடப்பாகத்தில் உமையைப் பதித்துக் கொண்ட உமாமகேசுவரனை – அர்த்த நாரீஸ்வரனாகப் போற்றி வணங்குகிறோமல்லவா!

அதிலும் தன் மகன் பெருமையும் - புகழும் ஓங்கி அனைத்தவராலும் போற்றப்படும் தகுதியைப் பெறும்பொழுது புளகாங்கிதம் அடைந்த தாயின் மகிழ்ச்சியை – “ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும்” என்று வள்ளுவரைப் போல் யாரால் இவ்வளவு உள்ளத்தைத் தொட்டு கூற இயலும்.

அன்னையின் ஆவலை முழுமையுடன் பூர்த்தி செய்வதற்காகவாவது அவள் பெற்ற மகனோ – மகளோ – உயர்ந்த – உன்னதமான தகுதியை அடைந்திட உறுதியுடன் “முயன்று – முன்னேறத் தூண்டிடவே வள்ளுவர் இக்குறளை எழுதினாரோ?

அதற்கும் மேலாக **“தம்பி – தங்கையே”** – நீ இப்படிப்பட்ட உயர்ந்த தகுதியைப் பெறுவது – உனக்கு வரும் பெருமை மட்டுமல்ல – உன்னை வளர்த்து – மிகவும் கடுமையாகக் கடமையுடன் உழைத்து - இந்தத் தகுதிக்கு ஆளாக்கிய உன் தந்தைக்கு செய்யும் - பெரும் கைமாறப்பா – என்று வள்ளுவர் மேலும் இளைய சமுதாயத்தை அற்புதமாக உசுப்பிவிடுகிறார் என்பதை ஆச்சரியத்துடன் பார்க்கலாம்!

**சிற்றினம் தளிர்கள் மலர்ந்து வளர்ந்திட** : “அறிவார்ந்த வளத்துடன் வளரும் குழந்தைகளே, அகிலத்தில் அன்னை பாரதநாட்டின் பெருமையைக் கூட்டுவார்கள். நம்புகிறேன் - மனமாற நம் இளைஞர்களை – நமது அற்புதமான நவீன இளைஞர்களை! அவர்கள் சிங்கமென சிலிர்த்தெழுந்து பணியாற்றி நம் தாய்த்திரு நாட்டின் புகழை உலகத்தில்

உச்சாணிக்கு உயர்த்துவார்கள் என்று உறுதியுடன் உரைத்திட்டார் – விவேகானந்தர்” – (My faith is in our younger generation – the Modern generation)

நம் குழந்தைகளுக்கு நற்குணப்பெருமைகளை வள்ளுவர் வலியுறுத்துகிறார், நற்குணங்களே வாழ்க்கையை வனப்பு கூட்டி சிறப்பிக்கும்.

**குழந்தைகளே!**

**வள்ளுவர் கூறும் அறிவுரையைக் கேளுங்கள்.**

அனைத்தவருடன் **“அன்பாக”** இருங்கள் உங்களால் இருக்க முடியும் - இருந்தே ஆக வேண்டும். பொங்குகின்ற அன்பு வெள்ளத்தை அணைபோட்டு யாராலும் தடுக்க முடியாது என்பதை உணர்வீர்களாக

**“அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
**புன்கண்நீர் பூசல் தரும்”**

என்கிறது திருக்குறள்.

**ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும்**
**நேசத்தால் நீ நினைந்து கொள்.**

என்று சொல்கிறது ஔவைக்குறள்

**அருமைச் செல்வங்களே!**

எல்லோருடனும் **இனிமையாகப் பேசு – பழகு.** இனிமைதான் அனைத்திலும் இனிப்பானச் சுவையைத் தந்து மகிழ்விக்கும் என்பதை வள்ளுவர் குழந்தைகளுக்குத் “தேன் தடவிய பலாச் சுளைபோல் அளித்திருப்பது” அற்புதமாகயிருக்கிறது. கண்டிப்பாக **வள்ளுவர்** வார்த்தைகள் குழந்தைகளின் இதயத்தில் பதிந்திடுமென்பதில் ஐயமேயில்லை.

என்ன அழகு – என்ன எளிமையான விளக்கம். இனிமையான பழுத்த பழத்தைவிட்டு – துவர்க்கும் காயைச் சாப்பிடாதே!

**“இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந்து அற்று”**

**குழந்தை சிறிது வளர்ந்துவிட்டான். உலக இயல்புகளைப் புரிந்து செயல்படும் அறிவை அடைந்துள்ளான். அந்நிலைக்கு வள்ளுவர் கூறும் அறிவுரைகள்.**

**தம்பி – தங்கைகளே**

**“அடக்கமாயிருங்கள்”**

“கீழ்படிவதை அறிபவனே கட்டளையிடவும் அறிவான்” என்பார் விவேகானந்தர்.

“ராமரும் சீதையும் வனவாசத்தின்பொழுது அழகான ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்திருந்தனர். அந்த மரத்தின் மேல் அழகான பூச்செடி கொடியாகப் படர்ந்திருந்தது. பசுமையான இலைகள், அழகான மலர்கள் - கண்ணைப் பறிக்கும் அற்புதமான அழகான காட்சியாகயிருந்தது. சீதை ராமரிடம் சொன்னாள். அழகான மலர்களும் - இலைகளும் கொண்ட அடர்ந்து படர்ந்த கொடியின் அழகே அழகு. ராமர் சொன்னார். இச்செடியை படறவிட்ட குளுமையான நிழல் கொடுக்கும் மரத்தின் சிறப்பே! சிறப்பு! இருவரும் இப்படித் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே வாதிட்டனர். அருகிலிருந்து அனுமனிடம் - உன் கருத்தென்ன என்று கேட்டனர். அனுமன் அடக்கத்துடன் சொன்னார். என் கண்ணுக்கு மரமமு் தெரியவில்லை. செடி – கொடி – மலர்களும் தெரியவில்லை. எனது ராமனின் மலர்ப் பாதங்களும் - அன்னை சீதாதேவியின் அருட்பாதங்களும்தான் தெரிகின்றன என்று தன்னடக்கத்துடன் கூறினார் – புத்திப்பலம் எனப் போற்றி புகழப்படும் அனுமான். என்னே! அடக்கம்.

இதனை வள்ளுவர் மிகச் சிறப்பாகக் கூறுவார் – அடக்கமாயிரு – அடக்கமில்லாவிட்டால் அழிவுப்பாதைக்கு இழுத்துச் செல்லப்படுவாய்.

**“அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமமை**
**ஆரிருள் உய்த்து விடும்”**

**சிறப்புடையச் செல்வங்களே!**

உலகத்தில் பிறந்ததலிருந்து – கல்வி – கேள்வி – அறிவில் சிறந்து உயர்ந்து – எல்லா இன்பசுகங்களையும் வளங்களையும் பெற்று – மேன்மையுடன் - புகழுடன் வாழும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காலகட்டத்திலும் உதவியவர்கள் மிகப்பலர் இருப்பார்கள். பிறர் உதவி பெறாமல் உயர்வதோ – வாழ்வதோ எவருக்கும் இயலாது என்பதை உணர்ந்து – அதற்காக அவருக்கு மறக்காமல் **“நன்றி”** செலுத்துவது மிகமிக அவசியம் மட்டுமல்ல – தவிர்க்கக்கூடாத – ஏன்! தள்ளிப்போடக்கூடாதக் கடமையாகும்.

என்றோ இளமையில் ஆயர்பாடியில் செய்த சேவைக்காக மாமன்னனும் பகவானுமான கண்ணபிரான் பரம ஏழையான குசேலரை பஞ்சு மெத்தையில் படுக்கவைத்து – சுகமாக அவரது காலைப்பிடித்து உபசரித்ததை யாரும் மறக்கமுடியாதல்லவா!

வள்ளுவர் வலிவுடன் வலியுறுத்துகிறார். எல்லாவற்றையும் மறக்கலாம் - செய்நன்றியை மறந்துவிடாதே – செய்நன்றியை மறந்தால் கடுமையான தண்டனை பெறுவாய்.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகற்கு"**

**இளம் மலர் மொட்டுகளே! வள்ளுவர் கூறுகிறார்,**

**தீயதை நினையாதே! தீமையைச் செய்யாதே!** அனைத்தவரிடமும் ஒற்றுமையாக ஒழுக்கத்துடன் இணைந்து வாழ்! ஒழுக்கம் உயிரைவிட உயர்ந்தது! தீயொழுக்கம் பேரைக்கெடுக்கும். குலப்பெருமையைக் கெடுக்கும்.

**ஆவியோடு காயமழிந்தாலும் மேதினியில்**
**பாவியென்று நாமம் படையாதே! என்பார் பட்டினத்தார்.**

பெற்ற பெருமைகள் கற்றறிவு – ஏன்! நம் உயிர்கூட **"ஒழுக்கத்திற்குப்"** பிறகுதான் என்று வள்ளுவர் ஒழுக்கத்தின் மாண்பினை பிஞ்சுகளுக்கும் புரியும்படி கூறுகிறார்.

**"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பைத் தரும்"**

**"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்".**

**வனப்பு மலர்க்கொத்துக்களே!** வள்ளுவர் உரைக்கிறார்

மனத்தாலும் - செயலாலும் - "**உண்மை காப்பீர்**"

**"வாய்மை"** வளத்தையும் - வளர்ச்சியையும் - புகழையும் பெருமையையும் - மன மகிழ்ச்சியையும் - மனநிறைவையும் கண்டிப்பாகத்தரும்.

வாய்மையின் சக்தியை தேசப்பிதா மகாத்மா காந்தியிடம் கண்டோம்
வாய்மையின் பெருமையை அரிச்சந்திர மகாராஜாவின் அழியாத
சரித்திரப் பெருமயிலிருந்து படிக்கிறோம்.

உண்மையான **"வாய்மை"** தீமையையேத்தராது. அதுதான் நிரந்தர வெளிச்சம் தரும் விளக்கு என்று வள்ளுவர் கூறுவார்.

**"உள்ளத்தால் பொய்யா தொழகின் உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன்"**

வளரும் இளைய சமுதாயமே!

உன்னுடன் எத்தனை போர்கள் முட்டிமோதி போட்டியிடுகின்றனர். கற்கும் கல்வியில் போட்டி – பள்ளியில் - கல்லூரயீல் சேரவே போட்டி – கற்பனையுடன் இயற்றிடும் கவிதை கட்டுரைகளில் போட்டி – தட்டித்தாவி – அடித்து – எறிந்து எட்டி உதைத்திடும் - நீந்திடும் பல விளையாட்டுகளில் போட்டி – கோடையிடியென எதிரொலிக்கும் மேடைப் பேச்சில் போட்டி – அழகுப்போட்டி – நடிப்புப் போட்டி எத்தனை எத்தனை போட்டிகள். **"குருத்துளே"** எதிலும் போட்டி தேவை மிகவும் அவசியம் கூட அதுவே வளர்ச்சி தரும். ஆனால் அதில் பொறாமைச் சிறிதளவும் கலக்கக்கூடாது - இனிய போட்டிதனை கொடும்பகையாக **"பொளாமை"** உணர்வு மாற்றி, பெருத்த அழிவில் முடியும் என்கிறார் வள்ளுவர்.

**ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்**
**தூங்காமல் தூங்கி சுகம் பெறுவதெக்காலம்**
என்பார் பத்திரகிரியார்.

**இளைஞர்களே!**

வேறு பகையே வேண்டாம் - **பொறாமை** உங்களை நீர்மூலமாக்கிவிடும் - போட்டியை வரவேற்போம் - பொறாமையை எட்டி உதைப்போம் என்று அருமையாக வள்ளுவர் பெருமான் கூறுவார்.

**"அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்**
**வழுக்கியும் கேடீன் பது"**

**செல்வங்களெ!**

கிடைத்துள்ள நேரம் பொன்னானது **"வெட்டிப்பேச்சில்"** வீணடிக்காதீர் – வாய்ப்பை நழுவவிடாமல் வெற்றிக்கனியைத் தட்டிவாரீர் என்கிறார் வள்ளுவர்.

கண்டேன் சீதையை என்று சுருக்கமாகச் சொன்ன சொல்லின் செல்வன் அனுமனை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். உருப்படியாகத்தெளிவுடன் சுருக்கமாகப் பேசுங்கள்

**ஒருரையால் வாய்க்கு முண்மைக்கு**
**ஓரனந்த நூல் கோடிப்**
**பேருரையாற் பேசில் என்ன**
**பேறாம் பராபரமே!**
என்பார் தாயுமானவர்

**சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல்"**
என்பார் வள்ளுவர்
**மாசற்ற மாமணிகளே!**

**"சினம்"** தவிர்த்திடுங்கள். கூர்மையான புத்தியுடையவனாயிருந்தாலும் கோபத்தில் கூர் மதி மழுங்கி விடுமல்லவா! கண்ணாடிக்கூண்டில் தூங்குபவன் கனவில் வந்த கோபத்தில் உதைத்து கண்ணாடிக்கூண்டு நொறுங்குவது போல் வனப்பான வளமான வாளிப்பான நம் வாழ்க்கை சினத்தால் **"சிந்தனைச் சிதறி"** சில நொடிகளில் சின்னாபின்னமாகிவிடும் என்பதை உணர்வீர்களாக.

வள்ளுவர் கூறுகிறார்.

**"மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய**
**பிறத்தல் அதனான் வரும்".**
**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்"**

என்று துன்புறுத்தியவனையும் நல்லது செய்து தண்டிப்போம். என்ன அற்புதமான அறிவுரையைப் பார்த்தீர்களா? இதுதான் நம் வள்ளுவரின் தனிப்பெருமை.

**இளைய தலைமுறையான அறிவுப் பெட்டகங்களே!**

**"கல்வி"** கற்றல் - கேள்வி ஞானத்தைப் வளர்த்துப் பெருக்கிக் கொள்ளுதல் என்பதை மானிடப் பிறப்பில் மிகவும் முக்கியமான காலகட்டமாகும். இது போனால் வராது. விட்டால் பெரும் இழப்பைத் தரும்.

அர்த்த சாஸ்திரத்தை எழுதிய அரசியல் மாமேதை சாணக்கியன் கல்வியின் அவசியத்தை அன்றே வலியுறுத்திய சில வார்த்தைகள் - கல்வி கற்றலின் முக்கியத்துவத்தை பசுமரத்தில் ஆணி அடித்தது போல் விளக்குகிறது.

**"கல்வி – கேள்வி அறிவு ஒவ்வொரு குழந்தையின் அடிப்படை பிறப்பு உரிமையாகும்.**

**கல்வி - கேள்வி அறிவுக்கு உதவாத பெற்றோரும் துரோகியாவர்.**

**கல்வி அறிவுடையவர் மிகவும் சுதந்திரமாகவும் - மனவலிவுடனும் எந்தக் கூட்டத்திலும் மதிப்பு மரியாதையுடன் கலந்து கொள்ளமுடியும்.**

**பல துளிகள் சேர்ந்து பெரு வெள்ளம் ஆவதுபோல் சிறிது சிறிதாகக் கற்றறிருந்த அறிவு பெரிய பொக்கிஷமாகப் பெருகி வளமையைக் கொடுக்கும்."**

**தெளிவறி யாதார் சிவனை யறிவார்**
**தெளிவறி யாதார் சீவனுமாகார்**
**தெளிவறியாதார் சிவமாகமாட்டார்**
**தெளிவறியாதவர் தீரார் பிறப்பே!**
என்கிறது திருமூலர் திருமந்திரம்

மேலும் தெளிவான அறிவில்லாதவர் உயிரற்ற சவத்துக்குச் சமானம் என்று திருமூலர் சாடுகிறார்

**அருமைக் குழந்தைகளே!**

பொய்யாமொழியார்!

வள்ளுவப் பெருந்தகை கல்வி அறிவின் அவசியத்தை வலியுறுத்துவதை முழுமையாக உணர்ந்து செம்மையாகவும் - சிறப்பாகவும் - மதிப்புடனும் - நிறைந்த வளத்துடனும் - வாழ்வு பெற்று மகிழ்வீர்களாக!

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக".**
**"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு".**
**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை".**
**குழந்தைகளே! வள்ளுவர் சொல்கிறார்**

தேவையானவற்றை திறம்படக் கற்றுக்கொண்டு அதன்படி செயல்படுங்கள்.

தோண்டத் தோண்ட கிணற்றில் தண்ணீர் ஊறுவதுபோல் படிக்கப் படிக்க மிகப்பெரிய அறிவாளியாவீர்கள்.

உலகத்தில் எல்லா செல்வமும் உபயோகித்தால் குறையுமல்லவா. ஆனால் கல்வியை உபயோகித்தால் குறையாது. மேலும் மேலும் வளரும்ப்பா!

**"செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அசசெல்வம்**

**செல்வத்து ளெல்லாந் தலை".**

**"கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு**

**ஒற்கத்தின் ஊற்றாந் துணை".**

**"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**

**ஆன்ற பெருமை தரும்".**

**இளைய சமுதாயமே! வள்ளுவர் சொல்கிறார்**

**"கேட்டுப் பெறும் அறிவிற்கு" ஈடு** எதுவுமில்லை. நீ படிக்கவில்லை என்றாலும் பரவாயில்லை. காதால் கேட்டுத் தெரிந்து கொள். நிச்சயம் பெரிய அறிவாளியாவாய். சின்ன சமாசாரம்தானே என்று விட்டுவிடாதீர்கள். அனைத்தையும் கேட்டுத் தெரிந்து கொண்டால் தேவையான பொழுது உதவிடுமய்யா! சிறு துரும்பும் பல்குத்த உதவுமப்பா!

**"அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்**

**உள்ளழிக்க லாகா அரண்".**

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**

**மெய்ப்பொருள் காண்பது அறிவு".**

**"எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு**

**அவ்வ துறைவது அறிவு".**

**"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**

**என்னுடைய ரேனும் இலர்"**

**வருங்காலச் செல்வங்களே!**

நம் பாரத நாடு "அறிவு தேசம்" என்று அழைக்கப்படுகிறதல்லவா! வள்ளுவர் கூறுகிறார் அறிவிற்கு அழிவே கிடையாது. எந்த எதிரியாலும் அதன் புகழை மறைக்கவோ அழிக்கவோ முடியாது!

யார் அறிவுரையைக் கேட்டாலும் அதன் உண்மையை தெரிந்து புரிந்து பயன்பெருங்கள்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் உலகிற்குத் தேவையான அந்தந்த அறிவைப் பெருக்கிக் கொள்ளுவது அவசியமல்லவா.

அறிவாளிக்கு மட்டும் எங்கும் எப்பொழுதும் மதிப்புண்டு.

**"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**

**வினைக்கரிய யாவுள காப்பு".**

**"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**

**அகநக நட்பது நட்பு".**

**"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**

**இடுக்கண் களைவதாம் நட்பு".**

**"இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று**

**புனையினும் புல்லென்னும் நட்பு".**

**இளைய சந்ததியினரே! வள்ளுவர் உரைக்கிறார் "உயிர் காப்பான் தோழனல்லவா".**

சிரித்துச் சிரித்துப் பேசினால் மட்டும் போதாது. **"நண்பனை"** இதயபூர்வமாக நேசித்து அவனுக்காக உயிரையும் கொடுக்கத் தயாராகயிருங்கள்.

நண்பனுக்குத் துன்பம் வந்தால் உடனே உதவ வேண்டும்.

எப்படி? – கட்டிய ஆடை நழுவும்போது கை தானாகச் செல்வது போல்.

நெஞ்சார்ந்த நண்பனை வித விதமாகப் பெரியவன் - சின்னவன் - இப்படிப்பட்டவன் - அப்படிப்பட்டவன் என்று புனைந்துரைத்துப் பேசக்கூடாது.

**கல்வி அறிவை திறம்படக் காற்று – தேர்ந்து – வளர்ந்து – சிறப்புடன் இளைய சமுதாயத்தில் இணைந்து – வாழ்க்கைக் கடமைகளை ஏற்று உழைத்திடும் தகுதியைப் பெற்று நமது இளையதலைமுறை மலர்ந்திருப்பதைக் காணும் வள்ளுவர் இதயம் மலர்ந்து தரும் இதமான – அதே நேரத்தில் - பதமான – பொறுப்புள்ள ஆலோசனைகள் - இக்காலத்திற்கும் - ஏன்! எக்காலத்திற்கும் பொருந்தி பயனளிப்பதாகவுள்ளது என்பது நம்மை மட்டில்லா வியப்பிலாழ்த்துகிறது.**

இக்காலகட்டத்தை, நாம் சிந்திக்கும் பொழுது – விவேகானந்தர் வீரதீரத்துடன் வெற்றிமுரசொலித்து முழங்கிய வார்த்தைகள் நம் இதயத்தில் ஆழமாகப்பதிந்துவிடும்.

**“எழுமின் ! விழிமின்! எழுந்திருங்கள் என் வீர இளைஞர்களே!**

இதற்காக வள்ளுவர் வழங்கும் அற்புதமான ஆலோசனைகளைப் பார்ப்போமா!

**நண்பர்களே!**

காலம் பொன்னானது! நழுவிப்போனால் திரும்பக்கிடைக்காது. வாய்ப்பு என்பது **“ஊசல் குண்டு”** (பெண்டுலம்) போல் அடிக்கடி வராது. கற்றுகின்ற பெரிய சக்கரம். இப்பொழுது தவறவிட்டால் - எப்பொழுது கிட்டுமோ அல்லது கிட்டாமலேயே போகுமோ தெரியாது! எனவே காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்பதுபோல் **“சரியான நேரத்தில்”** கப் எனப் பிடித்துக்கொள்ளுங்கள் என்கிறார்.

அதே நேரத்தில் சரியான இரைக்குப் பொறுமையுடன் காத்திருக்கும் கொக்கைப் போலும் - குறிபார்த்து அம்பு எய்திடும் போது மரத்தில் தொங்கிய பறவையின் கண் மட்டும்தான் தெரிறது என்று கூறிய அர்ச்சனன் போலும் முழு முனைப்புடன் முயற்சியை **“அஞ்சாமல்”** தொடர்வீர்களாக!

சரியாக எண்ணிச் செயலில் இறங்கியவுடன்

**“பயப்படாமல்”** செயல்படுங்கள்

**“எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே**
**செயற்கரிய செயல்”**

**“கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து”**

**“எண்ணியார் எண்ணம் இழுப்பர் இடனறிந்து**
**துன்னியார் துள்ளிச் செயின்”**

**ஊழிய – வர்த்தக நண்பா!**

ஊழிய - **“நிர்வாகத்தைப்”** பற்றிய வள்ளுவரின் தொலைநோக்கு உங்களுக்கு பேராச்சிரியத்தைக் கொடுக்கிறதல்லவா?

தலைதெறிக்கும் வியாபாரப் போட்டி – உலகமயமாதல் என்னும் திகில் - பொருளை வாங்குபவர்களின் பேராதிக்கம் - கடுமையான விலைச்சரிவு – நிர்வாகமியங்குதலில் தலைகீழ் மாற்றம் - அனைத்தவரும் குழுவாக அமைத்துக்கொண்டு முழுமையான நம்பிக்கையுடனும் - வெளிப்படையான தகவல் பரிமாற்றத்துடன் வியாபாரம் செய்ய வேண்டிய சூழ்நிலை – சரியானவரை சரியான இடத்தில் அமர்த்தி – நம்பிக்கை வைத்து – சரியான மரியாதை மதிப்புடன் - இணைந்து நடத்தப்பட வேண்டிய நிர்வாக நிர்பந்தம் - திறமையை மதித்தலின் அவசியம் - நிர்வாகத்தில் அனைத்தவரும் சுதந்திரமாக நிர்வாக நலனுக்கு ஒன்றிணைந்து உழைத்திட வேண்டிய அவசியம் போன்றவைகள் நவீன நிர்வாகத்தின் அடிப்படை கொள்கைகளாகவும் - நிர்வாகச் செயல்முறைகளாகவும் இருக்கிறது என்பதை அறிகிறோம்.

இதைப்பற்றி வள்ளுவர் அன்றே தொலைநோக்குடன் கூறியுள்ள ஆலோசனைகளைப் பார்ப்போமா!

**வெற்றிகாணத்துடிக்கும் சுய தொழில் முயற்சியாளர்களே! வள்ளுவர் சொல்கிறார்**

தொழிலின் செயல் - வழிமுறைகளை அறிந்து – புரிந்து – திறம்படச் செய்பவனால் ஆகாத தொழிலும் உண்டோ! அவன் வெற்றியை அள்ளி வருவது நிச்சயம் என்று நம்பி – அவனைத் தேர்ந்தெடுப்பீராக!

இவன்தான் இதை உயர்வாக – உள்ளார்வத்துடன் செய்யமுடியும் என்றால் - அவனை நம்பி தொழிலாற்றச் செய்தால் மட்டும் போதாது. அவனை தொழிலின் சொந்தக்காரன் போல் மதித்து – மரியாதையுடன் உயர்த்திப் பயனடைவீராக!

கொடுத்த தொழிலை நேர்மையுடன் - தன்னார்வத்துடன் பணி செய்பவனை மதித்துப் போற்றாத தொழிலகம் நஷ்டத்தை அடையும் - **மகாலட்சுமி ஓடிவிடுவாள்.**

**“அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்**
**சிறந்ததானென்று ஏவற்பாற்று அன்று”**

**“இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன் கண்விடல்”**

**“வினைக்குரிமை நாடிய பின்றை அவனை**
**அதற்குரியன் ஆகச் செயல்”**

**எனதருமை தொழில் நண்பா! வள்ளுவர் வாக்கினைக் கேளீர்**

**"முயற்சிதான்"** முதலும் மூத்ததுமான மூலதனம் என்பதை உணர்ந்திடுவீர். தொழிலில் இறங்கிவிட்டால் முழுமனதுடன் - மனத் திட்பத்துடன் செயல்படுதல் அவசியம்.

தொழிலில் உள்ளவர்களை உருவத்தால் அல்லது தகுதியால் சிறியவர் – பெரியவர் என்று இகழக் கூடாது. அனைத்தவரும் தொழிலின் வெற்றிக்கு கூட்டாக உழைக்க அவசியமாகின்றனர். **"கூட்டுழைப்பே"** வெற்றிதரும்.

எத்தொழிலைச் செய்தாலும் தேவையான **"பொருள்"** கிடைக்கிறதா? தேவையான **"கருவிகளும் சாதனங்களும்"** உள்ளனவா? அதற்கான **"காலம் சரியாகவுள்ளதா?"** தேர்ந்தெடுத்துள்ள **"இடம்"** பொறுத்தமானதா! என்பதையெல்லாம் தீர்க்கமாக சிந்தித்து செயலாற்றிடுவீராக!

ஒரு தொழிலைச் செய்யும்போதே தொடர்ந்து புதிய கண்டுபிடிப்புகளையும் - வளர்ச்சிகளையும் உண்டாக்கினால் தொடர்ந்து தொழில் செய்ய யானை பலம் கிட்டும் (Continuous Development and Improvement) என்பன வள்ளுவர் கூறும் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கான அற்புதமான ஆலோசனைகள்.

**"முயற்சி திருவினை யாக்கும் முயற்சிறின்மை**
**இன்மை புகுத்தி விடும்"**
**"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற"**
**"உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து"**
**"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று"**
**தொழிலதிபரே! வள்ளுவர் கூறுகிறார்**

நிறைய சம்பாதித்து **"பொருளைப் பல மடங்கு"** பெருக்குங்கள். பொருள் ஈட்டுவது பாவமில்லை. அதுவும் புண்ணியம்தான்.

பொருளைக்குவித்தல் தவறல்ல! மதிப்புடன் தொழில் நடத்த இதுதான் சரியான முறையாகும்.

சம்பாதிக்கும் திறம் அறிந்து நேர்மையுடன் பொருளைச் சேர்ப்பது நல்லறமாகும். அனைத்தவருக்கும் இன்பத்தைக் கொடுக்கும்.

நிறைய **"லாபத்துடன் தொழில்"** செய்வது தற்காப்புடன் கூடிய ஆபத்தில்லாத தொழில் முறையாகும்.

தொழிலால் போட்டியாளரை சிதறிடித்து சின்னபின்னமாக்க நிறைய லாபத்தை ஈட்டுதல் அவசியம்.

**அன்பரே!**

வள்ளுவர் மேலும் கூறுகிறார்.

**"ஆழம் தெரியாமல் காலைவிட்டு"** இருப்பதும் போச்சு நொள்ளைக் கண்ணா என்பது போல் - ஏதோ லாபம் வருகிறது என்று இருப்பதையும் இழந்து தவிக்காமல் - தீர்க்கமாகச் - சிந்தித்து செயல்படுவீர்.

தொழிலில் எதையும் **"திட்டமிட்டுச்"** செயல்படுதல் மிகமிக அவசியம்.

பெரிய தவறைச் செய்தால் எத்தனை பேர் முன்வந்து உதவினாலும் காப்பாற்ற முடியாமல் மூழ்கிவிடுவாய் - ஜாக்கிரதை – கவனத்துடன் ஆராய்ந்து செயல்படு.

எதைச் செய்தாலும் துல்லியமான **"லாப நஷ்டக் கணக்கைச்"** சிந்தித்து செயலில் இறங்கு.

**தம்பி – விவேகானந்தர் கூறுவார் –** ஆராய்ந்து கொள்கை வகுத்து செயல்படுபவன் ஆயிரம் தவறு செய்தால் - ஆராயாமல் செயல்படுபவன் ஐயாயிரத்துக்கு மேல் தவறுகளைச் செய்வான்.

நீதான் உனது லாப நஷ்டத்தை நிர்ணயிக்கும் முழுமையான பொறுப்பாளி. இதில் பிறர்மீது பழியைப் போடுதல் தவறானது என்று விவேகானந்தர் அறிவுறுத்தியுள்ளார்.

இதில் வள்ளுவர் சொல்வதைப் பார்ப்போமா!

**"ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை**
**ஊக்கார் அறிவுடை யார்!**
**"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு"**
**"ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**

**போற்றினும் பொத்துப் படும்"**

**"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்**

**ஊதியமும் சூழ்ந்து செயல்"**

**தொழில் முனை நண்பா –**

விவேகானந்தர் கூறியது போல் விழித்தெழு!

அதே நேரத்தில் வள்ளுவரின் அபாய எச்சரிக்கையை மனதில் வை! **பேராசை பெரு நஷ்டத்தைத் தரும்.** தங்க முட்டை போட்ட வாத்தின் கதையை நினைவில் கொள். லாபம் குறைந்தாலும் பெருத்த நஷ்டத்தை தவிர்க்கச் சிந்தி.

மரத்தில் மேலும் மேலும் அறிவில்லாமல் ஏறிக் கொண்டேயிருப்பது போல் **"தொழிலை ஆராயாமல் விரிவாக்கிக் கொண்டே"** போனால் தடாரென்று அதலபாதாளத்தில் விழுந்தழிவாய். கவனம்.

**"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை**

**போகாறு அகலாக் கடை".**

**"நுனிக்கொம்பர் ஏறினார் அ∴துஇறந்து ஊக்கின்**

**உயிர்க்குஇறுதி ஆகி விடும்".**

**தொழில் துறை வல்லுனரே! வள்ளுவர் சொல்கிறார்**

விடாமுயற்சி இறுதியில் நிச்சயம் வெற்றி தருமல்லவா! முழுமையாக முயற்சி செய். நன்மை கிட்டியே தீரும்.

செய்து உன் கடமை. தருவது என் பொறுப்பு என்று அர்ச்சுனனுக்கு கண்ணன் கீதையில் உபதேசிப்பார்.

**தன்கடன் அடியேனைத் தாங்குதல்**

**என்கடன் பணி செய்து கிடப்பதே!** என்பார் அப்பர் பெருமான்.

இதற்கு வள்ளுவர் பெருமான் கொடுக்கும் உறுதிமொழியைக் காண்போமா!

சிந்தித்து விடாமுயற்சியுடன் செயல்பட்டால் - வெற்றி உன் கதவைக் கண்டிப்பாகத் தட்டும்.

பயப்படாதே – சோர்வடையாதே - இறுதியில் வெற்றி உறுதி.

**"வருமுன் காப்போம்"** எனச் சிந்தித்துச் செயலாற்றினால்

உன்னால் எதையும் சாதிக்க முடியும் என்பதை நம்பு. (preventive steps)

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**

**திண்ணியர் அகப் பெறின்"**

**"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**

**தூக்கங் கடிந்து செயல்"**

**"ஊறொருரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்**

**ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்"**

**அன்பரே!**

வான் முட்ட வளர்ச்சி பெற்று செல்வம் கொழித்து வாழ்க்கை அமைந்தாலும் **"செய்யும் தொழிலே"** தெய்வம் என்பதை எப்பொழுதும் நினைத்திடல் வேண்டும்.

இராமாயணத்தில் சீதையின் தந்தையும் - மாமன்னனும் - மகரிஷி என்று அழைக்கப்பட்டவருமான ஜனகர் – அன்றாடம் சிறிது நேரம் தனது தோட்டத்தைத் தானே கலப்பைப் பிடித்து உழுது வந்தார்.

மகாபாரதத்திற்கு முன்பே "குருச்சேத்திரம்" என்று புகழ் பெற்ற – அந்தப் பகுதியின் மாமன்னர் குரு என்பவர் தினம் தினம் - தனது நிலத்தைத் தானே கலப்பைப் பிடித்து உழுவாராம்.

அவர் உழுத மண்ணை தேவர்கள் புனிதமடைய அவர்கள் மேல் பூசிக் கொள்வார்களாம்.

மிகவும் குணவந்தரான சிவாஜி மன்னரும் சிறிது நிலை தடுமாறியுள்ளார். பெரிய குன்றின் மேல் அமர்ந்து கருங்களல் உடைக்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணி செய்வதைப் பார்த்தார். எத்தனை பேர்களுக்கு **"நான்"** வேலை கொடுத்து **"வாழ வைத்துள்ளேன்"** என்று நினைத்தார். அத்துடன் நில்லாது அருகிலிருந்த தனது குரு பக்தராமதாசரிடம் **"என்னால் எத்தனை பேர் வாழ்கிறார்கள் பார்த்தீர்களா என்று பெருமை அடித்துக்கொண்டார்".** ராமதாசர் புன்சிரிப்புடன் பக்கத்திலிருந்த பணியாளரை, அருகிலிருந்த ஒரு கருங்கல் பாறையைக் காட்டி, அதை எடுத்துவரச் சொன்னார். அதை இரண்டாகப்

பிளக்கச் சொன்னார். என்ன ஆச்சரியம்? அந்தப் பாறையின் உள்ளே சிறிது திறந்தவெளி. அதில் கொஞ்சம் தண்ணீர். அதில் ஒரு தேரை தன் குட்டிகளுடன் வசித்தது.

சிவாஜியைப் பார்த்து ராமதாசர் கேட்டார்.

அரசே! யார் இந்த தேரைக்கு வாழ்வு கொடுத்து பாதுகாப்பவர்? நீங்களா என்று கேட்டார்!

அதிர்ச்சி அடைந்த சிவாஜி மன்னர்

கடவுளின் பரந்த கருணையை உணர்ந்தார்.

எனவே தொழில் செய்து பணம் குவிப்பது கடமையாகும். ஆனால் அதில் பலரின் உழைப்பும், கடவுளின் கருணையும் கலந்திருப்பதால் - மகாத்மாகாந்தி கூறியது போலும் - கண்ணன் கீதையில் உபதேசித்தது போலும் - ஈட்டிய பெரும் பொருளான செல்வத்திற்கு நாம் “அறங்காவலர்” (Trustee) மட்டும்தான் என்று உணர்ந்து - இந்த பொறுப்பான உயர்ந்த வாய்ப்பை நமக்களித்த இறைவனுக்கு நன்றி சொல்வேமாமாக!

வள்ளுவர் கூறுவார்

**“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**

**தொழுதுண்டு பின் செல்பவர்”**

**“தொழிலின் அரசன்”** என்று கூறப்படும் உழவுத் தொழிலைச் செய்யும் உழவரை அனைவரும் தெய்வமென வணங்குவர்.

**“சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் - அதனால்**

**உழந்தும் உழவே தலை.”**

**“கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு, அடுக்கிய**

**கோடி உண்டாயினும் இல்”**

பிறருடன் பகிர்ந்து கொள்ளாத பொருள் எத்தனை கோடியாகயிருந்தாலும் பிரசேயாசனமில்லை!

**“நச்சு படாதவன் செல்வம், நடுஊருள்**

**நச்சு மரம்பழுத்து அற்று”.**

பிறருக்குக் கொடுத்து மகிழ்ந்து வாழாதவனிடம் உள்ள சொத்து விஷம் ஆகும்.

**“அற்றார், அழிபசி தீர்த்தல் அ்.்.து, ஒருவன்**

**பெற்றான் பொருள்வைப் புழி”**

என்று ஏழைகள் பசி தீரத்தலே, நீ சேர்த்த

**“செல்வத்தைச் சேர்த்துவைக்கும் பாதுகாப்பான வங்கியப்பா”** என்று மிகவும் அற்புதமாக வள்ளுவர் கூறுகிறார்.

**இளைய சமுதாயமே!** இன்று நீங்கள் இளைஞர்கள் - உனது பெற்றோர்களும் - மற்ற மூத்தவர்களும் - வயது முதிர்ந்த பெரியோர்கள்.

உங்கள் செல்வங்களோ குழந்தைகள்.

கண்ணன் கீதையில் கூறுவதுபோல் மனித வாழ்க்கை எனும் காலச் சக்கரம் கழன்று கொண்டோயிருக்குமாதலால் நிலைகள் மாறிக் கொண்டே வரும். இது இயற்கையான விதி. எனவே இன்றைய இளைஞர்கள் நாளைய முதியவர்கள். நமது கலாச்சாரத்தின் அற்புதமானக் கொள்கையே **“பெரியவர்கள் சொல்லைக் கேட்டு – வணங்கி – மதித்துச் செய்திடு என்பதுதானே”!.**

வள்ளுவர் இந்த மூலாதாரக் கொள்கையை முழுமையாக விளக்கிச் சொல்லி வழங்கியுள்ள அறிவுரைகள் மகத்தானதாகும்.

**இளைய தலைமுறைச் செல்வங்களே –**

வள்ளுவர் விளக்குகிறார்.

**பெரியாரைத் தெய்வமென மதித்து – வணங்கித்**

**தொழுதல் அவசியம் - அதுதான் உனக்கு அளப்பற நன்மை தரும்.**

**பெரியாரை அவமதித்தால் இறைவனாலும் உன்னைத்**

**துன்பத்திலிருந்து காப்பாற்ற இயலா.**

**தீயினால் சுட்டாலும் சாகாமலிருக்கலாம் - பெரியோர்**

**சாபத்தீ உன்னை எரித்துச் சாம்பாலாக்கும்.**

**எனவே பெரியோர் சொல் கேட்டு நட – பெருமையெல்லாம் வந்து குவியும்.**

**குறள் கூறும் ஆணித்தரமான அறிவுரை –**

**“பெரியாரை பேணாது ஒழுகின் பெரியாரால்**

**பேரா இடும்பைத் தரும்”**

**“எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்**
**பெரியால் பிழைத் தொழுகுவார்”**

**<u>நிறைவுரை</u>**

இன்னும் வள்ளுவர் வழங்கிய எத்தனை அற்புதமான குறட்பாக்கள் உள்ளன. இதை வள்ளுவர் பாணியில் சொன்னால்

**“அள்ள அள்ள ஊற்றெடுக்கம் அற்புதக் கேணி”**

**“இன்சுவை தேனமுதத் தமிழ் மறை திருக்குறள்” ஆகும்.**

அதனை எத்தனை பக்கங்கள் எழுதினாலும் மாளாது.

குறைந்த கொள் அளவோடு வடிவமைத்த “கட்டுரை” என்றி சிறிய பாத்திரம் இப்பொழுதே நிரம்பி வழிவதால் இத்துடன் நிறைவு செய்கிறேன்.

**நன்றி ! வணக்கம் ! !**